TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 173 BNSS)

C 8348033

1. District மாவட்டம் : Thiruvallur  PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption  Year: ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 5/AC/2025/TVL  Date: நாள் 28/3/2025 at about 16.00 h

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption  Sections பிரிவுகள்: U/s. 7(b)
   (ii) Act சட்டம்: (Amendment) Act, 2018  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: —  Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 21/3/2025  Date to : நாள் வரை 26/3/2025 at about 20.30 hrs over phone
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் Evening in their office  Time to : நேரம் வரை 27/3/2025 at about 15.00 hrs in their office, Thiruvallur

Seen [signature] 29/03/2025

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/3/2025  Time நேரம் : at about 1500 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28/3/2025  Time நேரம் : at about 16.00 hrs

Seen [signature] 29.03.2025

4. Type of Information : Written/ Oral / Electronic form : by written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North / about 2.5 kms
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி O/o. The Thiruvallur District Co-operative Housing Society Ltd., Thiruvallur.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Sivakumar  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kanagaraj
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21 years  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Running a Hotel at Redhills  (g) Address : முகவரி No: 96/2, Pemmasani Avenue, Perumalpattu Village, Veppampattu Post, Thiruvallur Tk & District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Accused-1. Tr. Ramalingam, Secretary and Accused-2 Tr. Egambaram, Accountant, O/o. the Thiruvallur District Co-operative Housing Society, C.V. Naidu Salai, M.V. Complex, 2nd floor, Thiruvallur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —by the Complainant—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Demanded bribe amount of Rs.15,000/- as commission for sanctioned loan amount by pledging their house property.

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

| | |
|---|---|
| Accused:- A1 Tr. Ramalingam, Secretary & A2. Tr. Egambaram, Accountant, O/o The Thiruvallur District Co-operative Housing Society Ltd., Thiruvallur | Submitted:- when I was present at Thiruvallur Vigilance and Anti-Corruption office on 28/3/2025 at 15.00 hrs. the Complainant Tr. K. Sivakumar, age 21, S/o Kamagaraj, from Perumalpattu village appeared before me and lodged a complaint against the marginally noted 2 accused. It as follows:- |

[FIR content will continue in the separate sheets...]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.S.TAMIZHARASI Rank INSPECTOR..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........V&AC, THIRUVALLUR......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............—............ பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Sivakumar 28/3/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 28/3/2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29/3/2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at about 09.30 hrs

Name: பெயர் [G.S.TAMIZHARASI]
Rank: நிலை INSPECTOR No. எண் .........
V&AC, THIRUVALLUR.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2025/TVL, U/s. 7(b) of Prevention of Corruption (Amendment) Act – 2018, continues......)**

அனுப்புநர். K.சிவக்குமார், த/பெ. கனகராஜ், எண்.96/2, பெம்மசாணி அவின்யூ, பெருமாள்பட்டு கிராமம், வேப்பம்பட்டு அஞ்சல், திருவள்ளூர் தாலுக்கா ‡ மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருவள்ளூர் மாவட்டம். ஐயா, நான் திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டு கிராமத்தில் பெம்மசாணி அவின்யூவில் எனது பெற்றோர்கள் மற்றும் எனது தம்பி மனோஜ் குமார் ஆகியோர்களுடன் வசித்து வருகிறேன். நான் பி.பி.ஏ வரை படித்துவிட்டு, செங்குன்றத்திலுள்ள என் பெரியப்பாவின் மகன் வெங்கடேஷ்குமார் என்பவருக்கு சொந்தமான ஓட்டல் வெண்ணிலாவின் பிசினஸை கவனித்து வருகிறேன். அவருக்கு வெண்ணிலா பேக்கரியும் உண்டு. இரண்டையும் அவரால் கவனித்துக்கொள்ள முடியாததால், என்னை அந்த ஓட்டலை லீசுக்கு எடுத்து நடத்திக்கொள்ளுமாறு கூறியதால், நானும் வீட்டில் பேசி முடிவெடுத்ததில், நாங்கள் தற்போது வசிக்கும் வீடானது கடந்த 2020-ம் ஆண்டில் என் அப்பா மற்றும் அம்மாவின் பெயரில் வாங்கிய வீடாகும். எனவே அதனை குறைந்த வட்டிக்கு அடமானம் வைத்து அந்த பணத்தில் என் அண்ணனிடம் கொடுத்து கடையை எடுத்து நடத்த முடிவு செய்தோம். ஏனெனில் என் அப்பா திருநின்றவூர் அலீஸ் கடையில் ரூ.15,000/-ற்கு மாத சம்பளத்தில் வேலை செய்கிறார். என் தம்பி தற்போது முதலாம் ஆண்டு பி.எஸ்.சி (விஸ்காம்) படிக்கிறார். எங்கள் வீட்டு சூழ்நிலை மிகவும் கஷ்டமாக உள்ளதால், என் பெற்றோர்கள் நான் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டனர். அதன்பின் குறைந்த வட்டிக்கு வீட்டை அடமானம் வைக்க தேடியதில் திருவள்ளூரிலுள்ள திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிமிடெட் என்ற சங்கத்தில் குறைந்த வட்டிக்கு அடமானம் வைக்கலாம் என்று கூறியதால், நானும் என் அப்பாவும் கடந்த பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில், எங்கள் அனைத்து ஆவணங்களுடன் திருவள்ளூர் சென்று, சி.வி நாயுடு சாலையிலுள்ள எம்.வி காம்ப்ளக்ஸில் 2-வது மாடியில் அமைந்துள்ள மேற்படி கூட்டுறவு வீட்டு வசதி சங்க அலுவலகத்திற்குள் சென்றபோது, அங்கு கணக்காளர் என்ற போர்டுக்கு கீழ் அமர்ந்திருந்தவர் எங்களிடம் எதற்காக வந்தீர்கள் என்று கேட்டுவிட்டு, அதுசம்மந்தமான ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, அவரது பெயர் ஏகாம்பரம் என்றும், அந்த அலுவலகத்தில் கணக்காளராக வேலைப்பார்ப்பதாகவும், எங்கள் வீட்டை ஆய்வு செய்ய வேண்டும் என்றும், வீட்டிற்கான

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2025/TVL, U/s. 7(b) of Prevention of Corruption (Amendment) Act – 2018, continues......)**

மதிப்பறிக்கை பெற வேண்டும் என்று சில தகவல்களை கூறினார். அதன்படி நானும் அனைத்தையும் செய்தேன். அவர்களும் எங்கள் வீட்டை வந்து ஆய்வு செய்துவிட்டு சென்றனர். அதன்பின் கடந்த 20.02.2025-ந்தேதி என் பெயரிலும், என் அப்பா மற்றும் அம்மா பெயரிலும் சங்க உறுப்பினராக சேர்க்க பணம் கேட்டார்கள். என் அம்மாவிற்கும், எனக்கும் தலா ரூ.125/-ம் என் அப்பா பெயருக்கு ரூ.2,500/-ம் கட்டினேன். அதற்கு ரசீதும் கொடுத்தார்கள். பின்னர் கடந்த 21.03.2025-ந்தேதி நானும் என் பெற்றோர்களும் சேர்ந்து மணவாளநகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அடமானப்பத்திரம் ஒன்றை பதிவு செய்து, அந்த ஆவணத்தை அன்றைய தினமே கொண்டுவந்து கணக்காளர் திரு.ஏகாம்பரம் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் அதனை பெற்றுக்கொண்டு, காசோலை வாங்கும்போது வாங்கிய லோனிற்கு 2% கமிஷன் பணம் தரவேண்டியிருக்கும் அதனால் தயாராக இருங்கள் என்று கூறினார். நான் அவ்வளவு பணம் என்னால் தர முடியாது. நானே பிசினஸ் துவங்கவே வீட்டை வைத்து வாங்குகிறேன் என்று கூறியதற்கு, சரி நீங்கள் வந்து செயலாளர் திரு.இராமலிங்கம் அவர்களை பாருங்கள், பணம் வந்ததும் உங்களுக்கு போன் செய்கிறேன் என்று கூறி, அவருடைய செல்போன் எண்ணை எனக்கும், என்னுடைய செல்போன் எண்ணை அவரும் பெற்றுக்கொண்டு அனுப்பினார். அதன்பிறகு கடந்த 26.03.2025-ந்தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் என் செல்போனிற்கு திரு.ஏகாம்பரம் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு, நாளை காலை செக் ரெடியாகவிடும், அதனால் நீங்கள், உங்கள் அப்பாவின் வங்கி கணக்கு எண்ணிற்கான 12 செக் லீப்புடன் வந்து செயலாளரைப் பாருங்கள் என்றும், வரும்போது, ஏற்கனவே கூறியிருந்தபடி பணத்துடன் வாருங்கள் என்று கூறினார். அதன்பின் நானும் என் அப்பாவும் நேற்று (27.03.2025) மாலை சுமார் 03.00 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்குள் சென்றபோது, திரு.ஏகாம்பரம் இருந்தார். எங்களைப்பார்த்ததும், என்ன பணம் கொண்டு வரவில்லையா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னதும், என் அப்பாவின் வங்கி கணக்கின் 8 காசோலைகளை பெற்றுக்கொண்டு, 3 பதிவேடுகள் மற்றொரு பில் புத்தகத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டு, வாருங்கள் செயலாளரைப்பார்க்கலாம் என்று கூறி இருவரையும் அழைத்துக்கொண்டு அருகிலிருந்த அறைக்குள் சென்றபோது, திரு.இராமலிங்கம், செயலாளர் அவர்கள் அமர்ந்திருந்தார். அவர் என் அப்பாவிடம் ரூ.11,76,000/-ற்கு செக்

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2025/TVL, U/s. 7(b) of Prevention of Corruption (Amendment) Act – 2018, continues......)**

கொடுத்தார். அதனை பெற்றதும், என் அப்பாவை அழைத்துக்கொண்டு திரு.ஏகாம்பரம் வெளியே சென்றுவிட்டார். அதன்பின் செயலாளர் திரு.இராமலிங்கம் அவர்கள் என்னைப்பார்த்து சரியாக மாதாமாதம் பணத்தை கட்டிவிட வேண்டும். கட்டாமல் விட்டுவிட்டால் பிரச்சனையாகும் என்று கூறிவிட்டு, சரி எவ்வளவு பணம் சொன்னார்கள் என்று கேட்டார். அதற்கு அவரே 2% தானே ரூ.24,500/- வருகிறது என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி, என் குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறியபோது ரூ.18,000/-ம் கொடுக்கச்சொன்னார். நான் இந்த பணத்தில்தான் ஓட்டல் நடத்த எல்லா செலவுகளையும் பார்க்க வேண்டும் என்று கூறியபோது. சிறிது யோசித்துவிட்டு சரி கடைசியாக ரூ.17,000/-தை நாளை ஏகாம்பரத்திடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறியனுப்பினார். நானும் அவரது அறையை விட்டு வெளியே வந்தபோது திரு.ஏகாம்பரம் என்ன சொன்னார் என்று கேட்டதற்கு நான் மேற்படி விவரத்தை தெரிவித்து என் நிலைமையை கூறியபோது, அதுவே குறைவுதான், போய் பணத்தை போட்டு நாளை கொண்டு வந்து கொடுத்துவிடு என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், நீங்கள் எனக்காக செயலாளரிடம் பேசக்கூடாதா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னால் முடியாது, வேண்டுமென்றால் நீ நாளை வரும்போது ரூ.15,000/-ம் கொண்டுவா நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் நாளை காசோலையை செலுத்துவதற்காக அப்பாவுடன் வங்கிக்கு செல்லவேண்டும் என சொன்னேன். உடனே திரு.ஏகாம்பரம் அவர்கள் அப்படியென்றால் நாளை மறுநாள் (29.03.2025) வருமாறும், வரும்போது தனக்கு போன் செய்யுமாறும் கூறினார். அதன்பின் நாங்கள் இருவரும் வீட்டிற்கு சென்று, இதுசம்மந்தமாக பேசியபோது, எங்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/-ஐ செயலாளர் திரு.இராமலிங்கம் மற்றும் கணக்காளர் திரு.ஏகாம்பரம் ஆகியோர்களுக்கு கொடுக்க விருப்பம் இல்லாததால், அவர்கள் கேட்ட பணம் ரூ.15,000/- தயார் செய்து எடுத்துக்கொண்டு இன்று 28.03.2025-ந்தேதி மாலை 03.00 மணிக்கு தங்களது அலுவலகத்திற்கு வந்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டு இப்புகாரை தங்களிடம் கொடுக்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பை கொடுப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, **SdXXX (K.Siva Kumar)** 28.03.2025.

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2025/TVL, U/s. 7(b) of Prevention of Corruption (Amendment) Act – 2018, continues……)**

**Honoured Sir,**

I received the above complaint on 28.03.2025 at about 15.00 hrs, after getting proper permission from DVAC on the complaint, a discreet enquiry is conducted on any enmity and genuineness of the complaint and the reputation of the both accused are verified. Based on the outcome of the enquiry, there is prima-facie made out to register a FIR on said complaint against the Accused-1 Tr.Ramalingam, Secretary and Accused-2 Tr.Egambaram, Accountant, Thiruvallur District Co-operative Housing Society Ltd., Thiruvallur. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.5/AC/2025/TVL u/s. 7 (b) of The Prevention of Corruption (Amendment) Act-2018 on today 28.03.2025 at about 16.00 hrs against the above said both accused and took-up action.

**SdXXX (G.S.TAMIZHARASI),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.
28.03.2025.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC.

28/3/2025
[G.S.TAMIZHARASI]
**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**